# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.M.C.10/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | எ.ம.சா.2 |
| Name | : | விஜயலட்சுமி |
| Father’s Name | : | க.பெ.கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | பாலவாக்கம், சென்னை |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 50 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 12.03.2026.

<u>முதல் விசாரணை.</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் அதில் உள்ள விவரங்கள் தெரியும் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். எனது வாக்குமூலத்தை ஏற்றுகொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரா் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன என்றால் 8ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியுமா என்றால் எழுத்து கூட்டி படிக்க தெரியும். எனது பிறந்த தேதி தெரியுமா என்றால் 01.01.1976 ஆகும். எனது கணவா் கிருஷ்ணமூா்த்திக்கும் எனக்கும் எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 06.09.1992 ஆகும். எனது சொந்த ஊா் சேத்பட் தாலுக்கா மோடிபட்டு கிராமம் ஆகும். எனது திருமணத்திற்கு முன்பே எதிா்மனுதாரரை தெரியுமா என்றால் தெரியும் எனது கணவரின் நண்பா் ஆவாா். நான் சென்னை பாலவாக்கத்தில் எந்த ஆண்டு முதல் வசித்து வருகிறேன் என்றால் 1992 முதல் வசித்து வருகிறேன். மனுதாராின் பெயா் தெரியுமா என்றால் தெரியும் அவரது பெயா் விஜயராணி. மனுதாரரும் எதிா்மனுதாரரும் நான் குடியிருந்து வந்த மணியம்மை தெருவில் குடியிந்ததால் எனக்கு அவா்களை தெரியும்.எத்தனை ஆண்டுகள் மனுதாரரும் எதிா்மனுதாரரும் அந்ததெருவில் குடியிருந்தாா்கள் என்றால் 1992 முதல் 6 வருடங்கள் குடியிருந்தாா்கள். எனது கணவா் என்ன வேலை செய்து வருகிறாா் என்றால் கொத்தனாா் வேலை செய்து வருகிறாா். எதிா்மனுதாரா் என்ன வேலை செய்து வந்தாா் என்றால் மின்சார வாரியத்தில் ஊழியராக பணிபுாிந்தாா். எதிா்மனுதாரருக்கும் எனது கணவருக்கும் எந்த வகையில் நட்பு என்றால் எனது கணவா் வேலைபாா்த்த கட்டிடத்தில் எதிா்மனுதாரா் மின்சார வேலை பாா்த்தவகையில் பழக்கம். நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடு என்றால் சாிதான். மனுதாரா் எதிா்மனுதாரருக்கு எதிராக எதற்காக வழக்கு தாக்கல் செய்தாா் என்ற விவரம்தெரியுமா என்றால் எதிா்மனுதாரா் திருமணம் செய்துகொண்டதால் பிரச்சனை. எனது வீட்டில் வாடகைக்கு விட்டிருந்த தேவராஜ் என்பவா் எந்த ஊரை சாா்ந்தவா் என்றால் தெரியாது எதிா்மனுதாராின் உறவினா் ஆவாா். மேற்படி தேவராஜை எதிா்மனுதாரரும் அவரது மனைவியும் எனது கணவரிடம் வாடகைக்குகேட்டதாக எனது கணவா் என்னிடம் கூறினாா். மனுதாரருக்கும் எதிா்மனுதாரருக்கும் எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள். எங்கள் தெருவில் குடியிருந்தபோது அந்த பிள்ளைகளுக்கு என்ன வயது என்றால் 1992ம் வாக்கில் பெரிய மகனுக்கு 7 வயதும், சிறிய மகனுக்கு 5 வயதும் இருக்கும். எவ்வளவு ரூபாய்க்கு வாடகைக்கு அமா்த்தினேன் என்றால் ரூ.300/- வாடகையாகும். எந்த ஆண்டு குடி அமா்த்தினோம் என்றால் 1993 ஆகும்.

எவ்வளவு நாள் குடியிருந்தாா் என்றால சமாா் 3 மாதங்கள் குடியிருந்தாா். மேற்படி தேவராஜ் என்பவா் மனுதாரரை கூட்டிசென்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது எதிா்மனுதாரா் சொல்லிதான் தெரியும் என்றால் சாியல்ல எனது கணவா்சொல்லி தெரியும். எதிா்மனுதாராின் 2வது திருமணத்திற்கு சென்றேனா என்றால் நானும் என் கணவரும் சென்றிருந்தோம். மேற்படி எதிா்மனுதாராின் 2வது திருமணத்திற்கு மனுதாரா் வந்திருந்தாரா என்றால் வரவில்லை. எதிா்மனுதாரா் நான் குடியிருந்த தெருவில் எத்தனை ஆண்டுகள் குடியிருந்தாா் என்றால் நாங்கள் அந்த தெருவிற்கு குடிபோகும் முன்பிருந்தே எதிா்மனுதாரா் குடியிருந்து வந்தாா். எதிா்மனுதாராின் மகன்கள் எந்த ஆண்டு முதல் எநத ஆண்டு வரை சென்னையில் வசித்தாா்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிா்மனுதாரருக்கு 2வது திருமணம் நடந்தது சம்மந்தமாக மனுதாரா் தகராறு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது கணவா் எதிா்மதாரருக்கு நண்பா் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சாியல்ல எனக்கு அவசியம் இல்லை. தற்போது எதிா்மனுதாரா் செய்யாாில் வசித்து வரும் விவரம் தெரியும்.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.
Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.